# பிள்ளையின் உரிமைகள் மீதான பட்டயம்

நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு செவைத்திணைக்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளையின் உரிமைகள் மீதான பட்டயம்

## முகவுரை

பிள்ளைகளின் கவனிப்பு, பராமரிப்பு, ஊட்டிப் பேணல், வளர்ச்சி, அபிவிருத்தி என்பன, இலங்கையின் சுதேசிய பாரம்பரியப் பழக்கங்களிலும், அதன் சமூகப் பொருளாதாரத்திலும், அத்துடன் அதன் நலன்புரிக் கொள்கைகளிலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவாதலாலும்;

ஒவ்வொருவரும் அதன்கண் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்கும், இனம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயம், தேசிய அல்லது சமூகத் தோற்றுவாய் ஆதனம், பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து எனும் அத்தகைய ஏதேனும் வகையைச் சேர்ந்த எந்த வேறுபாடுகளும் காட்டப்படாது உரித்துடையவர்களென்று இலங்கைச் சனநாயக, சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினால் உத்தரவாதஞ் செய்யப்பட்டுள்ளதாதலாலும்;

பிள்ளைகளினதும், இளம் ஆட்களினதும் உடல் வளர்ச்சியை, உள வளர்ச்சியை, ஒழுக்க வளர்ச்சியை, மத வளர்ச்சியை, சமூக வளர்ச்சியை முழுமையாக விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்கும், சுரண்டலிலிருந்தும், ஒரங்காட்டப்படுவதிலிருந்தும், அவர்களைப் பாதுகாப்பதற்குமென அரசானது அவர்களின் நலன்களை விசேட கவனத்தோடு மேம்படுத்தல் வேண்டுமென இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாதலாலும்;

சுதந்திரத்தை எய்தப்பெறுவதற்கு சமூக முன்னேற்றத்தையும், சிறந்தவாழ்தரங்களையும் மேம்படுத்தல் அத்தியாவசியமாதலாலும்;

குடும்பம், சமூகத்தின் அடிப்படை வகுப்பாகவும், அதன் எல்லா உறுப்பினர்களதும், விசேடமாக நலனுக்கும் வளர்ச்சிக்குமான இயற்கையான சூழலாகவும் இருப்பதாலும், அது சமூகத்தினுள் அதன் பொறுப்புக்களை முழுமையாக ஏற்கும் வண்ணம் அவசியமான பாதுகாப்பையும் உதவியையும் பெறுதல் வேண்டுமாதலாலும்;

1924 ஆம் ஆண்டின் பிள்ளையின் உரிமைகள், மீதான ஜெனிவா பிரகடனத்திலும், அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தினால் அங்கீகரிக்கப்பட்டு 1959 ஆம் ஆண்டு நவம்பர் 20 ஆம் தேதியின் ஐக்கிய நாடுகளினால் ஏற்றங்கீகரிக்கப்பட்டதும், 1976 ஆம் ஆண்டில் குடியியல், மற்றும் அரசியல் மீதான சருவதேச உடன்படிக்கையிலும், (குறிப்பாக உறுப்புரைகள் 23, 24இல்), 1976 ஆம் ஆண்டில் பொருளாதார, சமூக, கலாச்சார உரிமைகள் மீதான சருவதேச உடன்படிக்கையிலும், (குறிப்பாக உறுப்புரை 10 இல்), அத்துடன், பிள்ளைகளின் நலன்களைக் கவனித்திலெடுக்கும் நியதிச் சட்டங்களிலும்;

விசேடமான முகவராண்மைகளதும், சருவதேச ஒழுங்கமைப்புகளதும் இயைபான சாதனங்களிலும், குறிப்பிட்ட கவனம் பிள்ளைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய அவசியம் குறிப்பிடப்பட்டுள்ளதாதலாலும்;

பிள்ளைகளுக்கு, அவரின் உடல், உள வளர்ச்சியற்ற தன்மை காரணமாக, பிறப்பின் முன்னரும், பின்னரும் தோதான சட்டப்பாதுகாப்பு உட்பட்ட பாதுகாவல்களுக்கும் விசேட கவனமெடுத்தலும் அவசியமென சருவதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாதலாலும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*விதிவிலக்காக, கஷ்டமான நிலைமைகளில் பிள்ளைகள் வசித்து வருவதாலும், அத்தகைய பிள்ளைகளுக்கு விசேட கவனம் எடுக்கப்படுதல் தேவைப்படுவதாதலாலும்;*

*பிள்ளையின் ஒருமனப்பட்ட அபிவிருத்திக்கும் பாதுகாப்புக்கும், அத்துடன் பிள்ளையின் வாழும் தரத்தை முன்னேற்றுவதற்கும் கலாச்சாரப் பெறுமதிகளின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பது அரசுக்கு அத்தியாவசியமாக வந்துள்ளதாதலாலும்;*

*பிள்ளை சமூகத்தில், பொறுப்பு வாய்ந்த வயதுவந்த ஒருவராக நாளடைவில் பங்கு பற்ற ஒரு குடும்பத்திலும், ஊட்டிப் பேணும் அத்துடன் கவனமெடுக்கும் சமூகச் சூழ்நிலையிலும் தனிப்பட்ட ஒருவராக வளருவதும், முன்னேற்றமடைவதும் அத்தியாவசியமாக உள்ளதாதலாலும்;*

*பிள்ளையின் உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் கீழான அர்ப்பணங்களை இலங்கை உறுதிசெய்து, ஏற்றுங்கீகரித்துள்ளதாதலாலும், எனவே இவ்வுரிமைகளை அங்கீகரிக்கும் சட்டங்களையும் கொள்கைகளையும் ஏற்பாடு செய்தல் வேண்டுமாதலாலும்;*

*ஆகவே, இலங்கை அரசாங்கம் பின்வருமாறு இத்தால் வெளிப்படுத்துகிறது:-*

**உறுப்புரை 1**
**பிள்ளையின் வரைவிலக்கணம்**

*இப்பட்டயத்தின் நோக்கங்களுக்கான பிள்ளை என்பது, 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு மனித உயிரும் என்று பொருள்படும்.*

**உறுப்புரை 2**
**ஓரங்காட்டாமை**

*அரசானது-*

*(அ) பிள்ளையின் பெற்றோர்களது அல்லது சட்டப்பாதுகாவலர்களது இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு கருத்து, தேசிய இன, சமூகத் தோற்றுவாய், ஆதனம், இயலாமை பிறப்பு அல்லது வேறு அந்தஸ்து எப்படியிருப்பினும் எந்த விதத்திலுமான ஓரங்காட்டுதல் எதுவுமின்றி இப்பட்டயத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு பிள்ளையின் உரிமைகளை மதித்தலும், உறுதிப்படுத்தலும் வேண்டும்;*

*(ஆ) பிள்ளையின் பெற்றோரது அல்லது சட்டப்பாதுகாவலரது அல்லது குடும்ப உறுப்பினர்களது அந்துஸ்து, செயற்பாடுகள், வெளியிடப்பட்ட கருத்துக்கள், அல்லது நம்பிக்கைகள் என்பனவற்றின் அடிப்படையிலான எல்லா விதமான ஓரங்காட்டலிலிருந்து அல்லது தண்டனைகளிலிருந்து ஒரு பிள்ளையைப் பாதுகாப்பதை உறுதிப்படுத்தும் எல்லா தோதான நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுப்புரை 3
## பிள்ளையின் மிகச்சிறந் அக்கறை

(1) அரசானது-

(அ) பிள்ளையின் நலனுக்கு அவசியமான பாதுகாப்பையும் கவனத்தையும், அத்தகைய பிள்ளையின் பெற்றோரதும் பாதுகாவலர்களதும் உரிமைகளையும், கடமைகளையும் உறுதிசெய்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய நோக்கங்களை எய்துவதற்கான தோதான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தலும் வேண்டும்;

(ஆ) பிள்ளையின் பாதுகாப்புக்கும், கவனத்துக்கும் பொறுப்பான எல்லா நிறுவனங்களும் பாதுகாப்பு, சுகாதாரம் போன்றவற்றில் அடிப்படைத் தரங்களுடன் ஒத்திருத்தலை உறுதிசெய்தல் வேண்டும்;

(2) ஒரு பிள்ளை சம்பந்தமான ஏதேனும் கருமத்தில் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில், அது ஏதேனும் சமூக நலன்புரி நிறுவனத்தினால், சட்ட நீதிமன்றம் ஒன்றினால், நிருவாக அதிகார சபை ஒன்றினால் அல்லது ஏதேனும் சட்டவாக்கக் குழுவினால் எடுக்கப்பட்டிருப்பினும் பிள்ளையின் மிகச்சிறந்த அக்கறையை முதன் முதலில் கருத்திலெடுத்தல் வேண்டும்.

## உறுப்புரை 4
## உரிமைகளைச் செயற்படுத்தல்

அரசானது இப்பட்டயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளைச் செயற்படுத்துவதற்கான தோதான எல்லா நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும். பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகள் தொடர்பில், அரசு, பெறப்படக்கூடிய அதன் வழங்களின் ஆகக்கூடிய அளவுக்கு அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன் தேவைப்படுமிடத்து சருவதேச ஒத்துழைப்பையும் நாடுதலும் வேண்டும்.

## உறுப்புரை 5
## பெற்றோரின் வழிநடத்தலும், பிள்ளையின் உள்ளார்ந்த தகைமைகளும்

(1) அரசு, இப்பட்டயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பிள்ளையின் உரிமைகளை, பிள்ளையின் உள்ளார்ந்த தகைமையுடன் ஒத்ததானது ஒரு முறையில் பிரயோகிப்பதில் தோதான பணிப்பையும், வழிகாட்டலையும் ஏற்பாடு செய்வதற்கான பெற்றோரதும் பாதுகாவலர்களதும் உரிமைகளையும், கடமைகளையும் மதித்தல்வேண்டும்.

(2) அரசு, பிள்ளை எந்த மதத்தைச் சேர்ந்ததோ அம்மத படிப்பினைகளையும், பழக்கங்களையும், அத்தகைய பிள்ளையின் மனதில் நல்லெண்ணத்தை வளர்க்கும் நோக்குடன் படிப்பிப்பதன் மூலம் உகந்த மதச் சூழலில் அத்தகைய பிள்ளையை வளர்க்கும் கடப்பாட்டை பிள்ளையின் ஒவ்வொரு பெற்றோரது அல்லது பாதுகாவலரது மீது சுமத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்புரை 6
**வாழ்வதற்கும், உயிர்வாழ்வதற்கும் முன்னேறுவதற்கான உரிமை**

அரசு, ஒவ்வொரு பிள்ளையும் உயிர்வாழ்வதற்கான உள்ளியல்பான உரிமையை உடையவரென்பதை அங்கீகரித்து, பிள்ளையின் உயிர்வாழ்தலையும் முன்னேற்றத்தையும் இயலக்கூடிய ஆகக்கூடியளவுக்கு உறுதிசெய்தல் வேண்டும்.

உறுப்புரை 7
**பெயரும் தேசிய இனமும்**

(1) பிள்ளை பிறந்தபின்னர் உடனடியாக பதிவுசெய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், பிறப்பிலிருந்தே ஒரு பெயருக்கான உரிமைகளையும், நாட்டினத்தைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமைகளையும் அத்துடன் இயலுமாகக் கூடியவரையில் அவரது பெற்றோரை அறிந்து கொள்வதற்கானதும், அவரது பெற்றோரின் கவனத்தைப் பெற்றுக்கொள்வதற்குமான உரிமைகளையும் உடையவராதல் வேண்டும்.

(2) அரசு, பிள்ளை நாடற்றவராகக் கருதப்படுவதைத் தடுப்பதற்காக சட்டத்திற்கிணங்க இவ்வுரிமைகள் செயற்படுத்தப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

உறுப்புரை 8
**பிள்ளையின் தனித்தன்மையைப் பேணுதல்**

(1) அரசு, சட்டமுரணான தலையீடின்றி நாட்டினதும், பெயர் குடும்பத் தொடர்புகள் உட்பட்ட சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்வாறான அவரது தனித்தன்மையைப் பேணுவதற்குள்ள பிள்ளையின் உரிமையை மதிக்கப் பொறுப்பேற்றல் வேண்டும்.

(2) ஒரு பிள்ளையின் அடையாளத்தின் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அம்சங்கள் சட்டவிரோதமாகப் பறிக்கப்படுமிடத்து, அரசு, அவரது அடையாளத்தினை விரைவில் மீள் தாபிக்கும் நோக்குடன் தோதான உதவியையும், பாதுகாப்பையும் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

உறுப்புரை 9
**பெற்றோரிடமிருந்து பிரிந்திருப்பதிலிருந்து பாதுகாப்பு**

(1) அரச, பிள்ளையின் மிகச்சிறந்த அக்கறையில், ஏற்புடைத்தான சட்டத்திற்கும் நடபடி முறைக்குமிணங்க பிரிவு அவசியமானதாயிருந்தால் தவிர, ஒரு பிள்ளை அவரது பெற்றோரிடமிருந்து, அவர்களது விருப்பதிற்கு மாறாகப் பிரிந்திருக்கப்படாதிருப்பதை உறுதிசெய்தல் வேண்டும். அத்தகைய தீர்மானம், குறிப்பான சில விடயங்களில் அதாவது பெற்றோரினால் பிள்ளை புறக்கணிக்கப்பட்டு தவறாக வழிநடத்தப்படும்போது, அல்லது பெற்றோர் தனித்தனியாக வாழ்ந்து, பிள்ளையின் வாழ்விடத்தைத் தீர்மானிப்பதற்கான முடிவு எடுக்கப்படவேண்டிய ஒரு விடயத்தில், அவசியமாகலாம்.

(2) ஒரு பிள்ளை தொடர்பான ஏதேனும் ஒரு நடவடிக்கையில், அத்தகைய பிள்ளைமீது அக்கறையுள்ள எல்லா ஆட்களும் நடவடிக்கைகளில் பங்குப்பற்றித் தமது அபிப்பிராயங்களை வெளியிடச் சந்தர்ப்பம் கொடுக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அரசு, ஒன்று அல்லது இரண்டு பெற்றோரிடமிருந்து பிரிந்துள்ள ஒரு பிள்ளையின் (பிள்ளையின் மிகச்சிறந்த அக்கறைக்கு முரணாகுமிடத்துத் தவிர.) இரு பெற்றோருடனும் தனியான தொடர்புகளையும், நேரடியான தொடர்புகளையும் வைத்திருப்பதான உரிமையை மதித்தல் வேண்டும்.

(4) ஒரு பிள்ளை, தடுத்துவைத்தலுக்காக, மறியற்தண்டனைக்காக, நாட்டைவிட்டகற்றலுக்காக, நாடு கடத்தலுக்காக அரசினால் தொடரப்பட்ட ஒரு வழக்கு காரணமாக, ஒன்று அல்லது இரண்டு பெற்றோரிடமிருந்து பிரிந்திருக்குமிடத்து அல்லது ஒருவருக்கு மரணத்தின் விளைவாக (அரசின் கட்டுக்காவலின் இருக்கும்போது ஏதேனும் காரணத்துக்காக ஏற்படும் மரணத்தின் விளைவாக) பிள்ளையின் ஒன்று அல்லது இரண்டு பெற்றோரிடமிருந்து பிரிந்திருக்குமிடத்து அரசானது கோரிக்கையின்மீது, பெற்றோருக்கு, பிள்ளைக்கு அல்லது தோதானதாயிருக்குமிடத்து, குடும்பத்தின் வேறோரு உறுப்பினருக்கு விடயத்திற்கேற்றவாறு, அத்தகைய பெற்றோர் அல்லது பிள்ளை பற்றிய விபரங்கள் தொடர்பிலான தகவலை (அத்தகவல் பிள்ளையின் நலன்களுக்கு பங்கம் விளைவிக்கும்போது தவிர) கொடுத்தல் வேண்டும். அத்தகைய கோரிக்கையை அனுமதிக்கும்போது அரசு, அத்தகைய கோரிக்கை விடயத்திற்கேற்றவாறு பெற்றோரின் அல்லது பிள்ளையின்மீது ஏதும் எதிர் விளைவை உருவாக்காது என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

## உறுப்புரை 10
## குடும்ப மீள் சேர்க்கை

(1) ஒரு பிள்ளையும், பிள்ளையின் பெற்றோரும், பெற்றோர்-பிள்ளை உறவுமுறையைப் பேணும் அல்லது மீள்சேரும் நோக்கங்களுக்காக ஏதேனும் நேரத்தில் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கான அல்லது நாட்டுக்குள் வருவதற்கான உரிமையை உடையவராதல் வேண்டும்.

(2) ஒரு பிள்ளையினால் அல்லது பெற்றோரினால் (1) ஆம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் நோக்கங்களுக்காகச் செய்யப்படும் ஒரு விண்ணப்பம், அரசினால் ஆக்கபூர்வமான மனிதாபிமான முறையிலும் துரிதமாகவும் ஏற்றுக் கவனிக்கப்படுதல் வேண்டும். அரசு, அத்தகைய கோரிக்கை, விண்ணப்பக்காரருக்கு அல்லது அவரது எவரேனும் குடும்ப உறுப்பினருக்கு ஏதேனும் எதிர் விளைவுகளை ஏற்படுத்துதலாகாதென்பதை உறுதிசெய்தல் வேண்டும்.

(3) நாட்டை விட்டு வெளியேறுவதற்கான உரிமை, தேசிய பாதுகாப்பு, பொது ஒழுங்கு, பொதுச் சுகாதாரம் அல்லது ஒழுக்கம் என்பவற்றின் நலனுக்காக சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்ட அல்லது இப்பட்டயத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய உரிமைகளுக்கும் ஏனையோரின் அத்தகைய உரிமைகளுக்கும், சுதந்திரங்களுக்கும் மட்டும் அமைந்ததாதல் வேண்டும்.

## உறுப்புரை 11
## கடத்தப்படுவதிலிருந்தான பாதுகாப்பு

அரசு, ஒரு பிள்ளை அதன் பெற்றோரினால் அல்லது மூன்றாம் திறத்தினரால் கடத்தப்படுவதையும், அத்துடன் அத்தகைய பிள்ளை, அத்தகைய பெற்றோரால் அல்லது அத்தகைய மூன்றாந் திறத்தினரால் வைத்திருக்கப்படுவதையும் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நோக்கத்தை எய்துவதற்காக, அரசானது, இரு பக்க அல்லது பல்பக்க உடன்படிக்கைகளை அனுகுதலேயும் அல்லது ஏலவேயுள்ள உடன்படிக்கைகளை பூர்த்தியாக்குவதையும் முன்னெடுத்துச் செல்லல் வேண்டும்.

## உறுப்புரை 12
## அபிப்பிராயத்துக்கான உரிமை

அரசு, தனது சொந்தக்கருத்துக்களை உருவாக்கக்கூடிய தகைமையுள்ள பிள்ளைக்கு, அப்பிள்ளையைப் பாதிக்கும் எல்லா விடயங்களிலும் அக்கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிடுவதற்கான உரிமையை உறுதிசெய்தல் வேண்டும். அத்தகைய பிள்ளையின் கருத்துக்களுக்கு, பிள்ளையின் வயதுக்கும், முதிர்ச்சிக்குமிணங்க, தகுந்த முக்கியத்துவம் கொடுத்தல்வேண்டும்.

இந்நோக்கத்துக்காக குறிப்பாக பிள்ளையைப் பாதிக்கும் ஏதேனும் நீதி மற்றும் நிருவாக நடபடிக்கைகளில், சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடி முறையுடன் ஒத்ததான விதத்தில் பிள்ளை நேரடியாக அல்லது பிரதிநிதி மூலம் கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

## உறுப்புரை 13
## கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம்

(1) பிள்ளை கருத்து வெளியிடுதலின் சுதந்திரத்துக்கான உரிமையை உடையவராதல் வேண்டும். அத்துடன் இவ்வுரிமை, போராட்ட முனைகளைக் கவனத்திற்கெடுக்காத, வாய்மூலமாக அல்லது எழுத்துமூலமாக அல்லது அச்சில் அல்லது சித்திரவடிவில் அல்லது பிள்ளையின் விருப்பப்படியான வேறு ஏதேனும் சாதனவழியில் எல்லா விதமான தகவல்களையும் நாடுவதற்கு, பெறுவதற்கு அத்துடன் கொடுப்பதற்கான உரிமையையும் உள்ளடக்குதல் வேண்டும்.

(2) அத்தகைய உரிமையின் பிரேயாகம்.

(அ) ஏனையோரின் உரிமைகளையும் நற்பெயரையும் மதிப்பதற்கு, அல்லது

(ஆ) தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு அல்லது பொது மக்கள் சுகாதாரத்தை அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்கு அவசியமான அததகைய மட்டுப்பாடுகளுக்கு அமைந்தாதல் வேண்டும்.

## உறுப்புரை 14
## சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மதச்சுதந்திரம்

(1) அரசு, பெற்றோரின் தோதான வழிகாட்டல்களுக்கமைவாக பிள்ளையின், சிந்தனை செய்யும், மனச்சாட்சியைப் பின்பற்றும், சுதந்திரங்கள், மதச் சுதந்திரம் என்பவற்றை மதித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) ஒருவரது மத அல்லது நம்பிக்கையைத் தழுவுவதற்கான உரிமை, சட்டத்தினால் விதித்துரைக்கப்பட்டனவும், அத்துடன் தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு சுகாதாரம், ஒழுக்கம், அத்துடன் ஏனையோரின் அடிப்படை உரிமைகளையும், சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்கு அவசியமானதுமான அத்தகைய மட்டுப்பாடுகளுக்கு மட்டுமே அமைந்தனவாதல் வேண்டும்.

**உறுப்புரை 15**
**ஒருங்கு சேருவதற்கான சுதந்திரம்**

(1) அரசு, ஒருங்கு சேருவதற்கானதும், அமைதியான முறையில் ஒன்று கூடுவதற்குமான பிள்ளையின் உரிமையை அங்கீகரித்தல் வேண்டும்.

(2) ஒரு சனநாயகச் சமூகத்தில் தேசிய பாதுகாப்பு, பொதுமக்கள் ஒழுங்கு, ஆகியவற்றின் நலன்கருதியும், பொதுமக்களது சுகாதாரம் அல்லது ஒழுக்கத்தைப் பாதுகாப்பதற்கு அல்லது ஏனையோரின் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாப்பதற்கு அவசியமானதும் அத்துடன் சட்டத்திற்கு அமைவாக சுமத்தப்படுவனதுமானவும் தவிர எந்த மட்டுப்பாடுகளும் இவ்வுரிமைகளின் பிரேயாகத்தின்மீது சுமத்தப்படுதலாகாது.

**உறுப்புரை 16**
**அந்தரங்கத்தைப் பாதுகாத்தல்**

(1) எந்த பிள்ளையும் அவரது அந்தரங்கத்துடனோ, குடும்பத்துடனோ அல்லது கடிந்த தொடர்புகளுடனோ எதேச்சதிகாரமான அல்லது சட்டமுறனான தலையீடுகட்கோ அல்லது அவரது கௌரவம், நன்மதிப்பு என்பனவற்றின்மீது தாக்கப்படுவதுக்கோ உட்படுதலாகாது.

(2) ஒவ்வொரு பிள்ளையும் அத்தகைய தலையீடுகட்டு அல்லது தாக்குதல்களுக்கெதிராக சட்டத்தின் பாதுகாப்பைப் பெறுவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

**உறுப்புரை 17**
**தோதான தகவலை அணுகுதல்**

அரசு, வெகுஜனத் தொடர்புசாதனங்கள் பிரிந்துவரும் முக்கிய பணிகளை அங்கீகரித்து, பன்முகப்பட்ட தேசிய மற்றும் சருவதேச மூலங்களிலிருந்து, விசேடமாக, பிள்ளையின் சமூக, ஆன்மீக, மற்றும் ஒழுக்க நலன்களையும் உடல் மற்றும் உள சுகாதாரத்தைக் குறிக்கோள்களாகக் கொண்டவையான தகவல்களையும், வேறுதகவற் பொருட்களையும் பிள்ளை அணுகுதல் முடியுமென்பதை உறுதிசெய்தலும் வேண்டும். இந்நோக்கத்துக்காக, அரசு பின்வருவனவற்றை ஊக்குவித்தல் வேண்டும்-

(அ) பிள்ளையின் சமூக, கலாச்சார நலனுக்கான தகவலையும், தகவற்பொருளையும், வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் பரப்புதல்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) வெளியிடுதல், கொடுத்துமாறல் என்பவற்றில் சருவதேச ஒத்துழைப்பை ஊக்குவித்து, பன்முகப்பட்ட கலாச்சார, தேசிய மற்றும் சருவதேச மூலங்களிலிருந்தான அத்தகைய தகவலையும், தகவற்பொருளையும் பரப்புதல்;

(இ) பிள்ளைகளின் நூல்கள் வெளியிடுதலும் பரப்புதலும்;

(ஈ) சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் மொழிசார் தேவைகளுக்கு வெகுஜனத் தொடர்புசாதனங்கள் தனிப்பட்ட கவனம் செலுத்துதல்;

(உ) பிள்ளைக்கு ஊறு விளைவிக்கக்கூடிய தகவலிலிருந்தும் தகவற்பொருளிலிருந்தும் பிள்ளைப் பாதுகாப்பதற்கான தோதான வழிவகைகளை விருத்திசெய்தல்.

## உறுப்புரை 18
## நாட்டுப்பற்றை முன்னேற்றுதல்

நாட்டின்மீது பிள்ளைக்கு பக்தியை உருவாக்கி வளர்ப்பதும், அத்துடன் நாட்டுப்பற்றுள்ள பிரசைகளாக அவர்களை வளரச்செய்வதும் ஒவ்வொரு பெற்றோரதும், பாதுகாவலரதும் அத்துடன் எந்நிறுவனத்தில் பிள்ளைகள் கல்வியூட்டப்படுகின்றனரோ, அந்த ஒவ்வொரு நிறுவனத்தினதும் கடமையாதல் வேண்டும்.

## உறுப்புரை 19
## பெற்றோரின் பொறுப்பு

(1) அரசானது, அதன் பொருளாதாரக் கொள்கைகள் மூலம், பிள்ளையின் மீதான பராமரிப்பு, கட்டுக்காப்பு, பாதுகாப்பாண்மை, மற்றும் அபிவிருத்திக்கான பெற்றோரின் உரிமைக்கு ஆதரவளிப்பதன்மூலம் அதனை அங்கீகரிப்பதை உறுதிசெய்தல் வேண்டும், ஒரு பிள்ளையின் பெற்றோர்களும், பாதுகாவலர்களும் பிள்ளையைப் பராமரிக்கும், வளர்க்கும் அத்துடன் முன்னேற்றம் முக்கிய பொறுப்பை உடையவராதல் வேண்டும், பிள்ளையின் மிகச்சிறந்த அக்கறைகளே அவர்களது முக்கிய சிரத்தையாயும் இருத்தல் வேண்டும்.

இப்பட்டயத்தில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள உரிமைகளை உத்தரவாதம் செய்து முன்னெடுத்தச் செல்வதற்காக, அரசு பிள்ளை வளர்ப்புப் பொறுப்புக்களை நிறைவேற்றுகையில், பிள்ளையின் பெற்றோருக்கு அல்லது பாதுகாவலர்களுக்குத் தோதான உதவிகளையளித்தல் வேண்டுமென்பதுடன் பிள்ளைகளின் பராமரிப்புக்கான நிறுவனங்களின், வசதிகளின் மற்றும் சேவைகளின் அபிவிருத்தியை உறுதிப்படுத்தலும் வேண்டும்.

(2) அரசு, மற்றவற்றுக்கிடையில் வேலைசெய்யும் பெற்றோரின்/ பிள்ளைகள் பிள்ளைப் பராமரிப்புச் சேவைகளிடமிருந்தும், அவர்கள் உரித்தாக்கப் படக்கூடிய மற்றும் வசதிகளிலிருந்தும் நன்மை பெறுவதற்கான உரித்தையுடையவர்களை உறுதிசெய்வதற்கான தோதான எல்லா வழி வகைகளையும் எடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறுப்புரை 20
## தகாத வழிநடத்துகையிலிருந்தும், கவனியாதிருத்தலினின்றும் பாதுகாப்பு

(1) அரசு, பிள்ளை பெற்றோரின் அல்லது பாதுகாவலர்களின் பராமரிப்பில் இருக்கும்போது, பாலியல் தகாத நடத்தை உட்பட, எல்லா விதமான உடல், உள வன்முறை, ஊறு, தகாதநடத்தை, கவனியாமை, கவனமெடுக்காத நடத்தை, கொடுமையான நடத்தை அல்லது சுரண்டல் ஆகியவற்றிலிருந்து பிள்ளையை பாதுகாப்பதற்கான தோதான எல்லா சட்டவாக்க, நிருவாக, சமூக மற்றும் கல்வி வழிவகைகளை எடுத்தல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட குறுக்கோல்களை எய்தும் நோக்கத்துக்காக, அரசு, உடல்ரீதியான அல்லது உளரீதியான வன்முறை, கொடுமையான நடத்தை மற்றும் சுரண்டல் ஆகியவற்றைத் தடுப்பதற்காகவும், அத்துடன் பாதிப்படைந்தோருக்கு சிகிச்சையளிப்பதற்காகவும் தோதான சமூகத் திட்டங்களை ஏற்பாடு செய்தல் வேண்டும்.

## உறுப்புரை 21
## குடும்பமற்ற பிள்ளையின் பாதுகாப்பு

(1) தனது குடும்பச் சூழல் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாகப் பறிக்கப்பட்ட ஒரு பிள்ளை அல்லது பிள்ளையின் அக்கறைக்குப் பாதகம் விளைக்கக்கூடிய காரணங்களுக்காக அச்சூழலில் தொடர்ந்திருந்துவர அனுமதிக்கப்படக்கூடாத ஒரு பிள்ளை, அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட பாதுகாப்புக்கும் உதவிக்கும் உரித்துடைவராதல் வேண்டும்.

(2) அத்தகைய பிள்ளைக்கு தபாரிப்பிடம் ஒன்றைவைத்தல், மகவேற்பு செய்தல் அல்லது அத்தகைய பிள்ளையின் இனம், மதம், கலாச்சாரம், மொழி ஆகியவற்றின் பின்னணியில் அத்தகைய பிள்ளையை வளர்ப்பதன் விருப்பத்தைக் கருத்திற்கொண்டு அத்தகைய பிள்ளையைப் பராமரிப்பதற்காக, அவசியமேற்படின், உகந்த நிறுவனங்களிலும் வைத்திருத்தல் உள்ளிட்ட மாற்றுப்பராமரிப்பை அவசியமேற்ப்டும்போது மற்றவற்றுக்கிடையில் அரசு உறுதி செய்தல்வேண்டும்.

## உறுப்புரை 22
## மகவேற்பு

(1) மகவேற்பை வழங்கும்போது அரசானது பிள்ளையின் மிகச்சிறந்த அக்கறையையே தலையாய அவதானிப்பாகக் கொள்ளுதல் வேண்டும்.

(2) ஏற்புடைத்தான சட்டத்திற்கும், நடபடிமுறைக்கும் இணங்கவும் அத்துடன், பிள்ளையின் பெற்றோர், உறவினர்கள், மற்றும் பாதுகாவலர்கள் தொடர்பில் பிள்ளையின் அந்தஸ்தை நிர்ணயிப்பதற்குமான எல்லா தகவல்களும் பெறப்பட்டுள்ளன, என்பதையும், அத்துடன் தேவையேற்படின் தனது பெற்றோரது அல்லது பாதுகாவலரது இசைவு மகவேற்புக்குப் பெறப்பட்டுள்ளது என்பதனையும் அடிப்படையில் மட்டுமே ஒரு பிள்ளையின் மகவேற்பு அதிகாரமளிக்கப்படுமென்பதை அரசு உறுதிசெய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) அரசு-

(அ) ஒரு பிள்ளை, தாபரிப்புக் குடும்பத்தில் அல்லது மகவேற்கப்பட்ட குடும்பத்தில் அல்லது பிள்ளையின் பிறப்பு நாட்டில் ஏதேனும் பொருத்தமான முறையில் கவனிக்கப்பட முடியாதவிடத்து, வெளிநாட்டு மகவேற்பை அங்கீகரித்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய மகவேற்பு பிள்ளை பராமரிப்பு மாற்று முறையாகக் கருதவும் படலாம்;

(ஆ) வெளிநாட்டு மகவேற்பு வழங்கப்பெற்ற ஒரு பிள்ளை, உள்ளூர் மகவேற்பின் விடயத்தில் உளதானவற்றுடன் ஒத்தகாப்புக்களையும், தராதரங்களையும் அனுபவிப்பதை உறுதி செய்தல் வேண்டும்;

(இ) வெளிநாட்டு மகவேற்பில், அத்தகைய மகவேற்பின் திறத்தினராகவுள்ள ஆட்களினால் முறையற்ற நிதி இலாபம் பெறப்படவில்லை என்பதை உறுதி செய்வதற்கான தோதான எல்லா வழிவகைகளையும் எடுத்தல் வேண்டும்.

(4) பிள்ளையைக் கருவுற்றிருக்கும் ஒரு பெண்ணை, அப்பிள்ளையை மகவேற்புக்குக் கொடுக்கும் நோக்கத்துக்காக எவரும் பராமரிக்காமலிருப்பதை அல்லது வைத்திருக்காதிருப்பதை அரசு உறுதி செயதல் வேண்டும்.

## உறுப்புரை 23
## அகதிகளான பிள்ளைகள்

(1) ஏற்புடைத்தான சட்டத்திற்கிணங்கவும் நடபடி முறைக்கிணங்கவும், அகதியாகக் கொள்ளப்பட்ட அல்லது அகதி அந்தஸ்தைக்கோரும் ஒரு பிள்ளை அவரது பெற்றோருடன் அல்லது வேறு எவரேனும் ஒருவருடன் சேர்ந்திருப்பினும் இல்லாவிடினும் தோதான பாதுகாப்பையும் அத்துடன் இப்பட்டயத்திலும், மற்றும் அரசு ஒரு திறத்தினராயிருக்கும் வேறு சருவதேச மனித உரிமைகள் அல்லது மனிதாபிமான சாதனங்களிலும் எடுத்துக்கூறப்பட்டுள்ள ஏற்புடைத்தான உரிமைகளை அநுபவிப்பதில் மனிதாபிமான உதவியையும் பெறுதல் வேண்டுமென்பதை உறுதிசெய்வதற்கான தோதான வழிவகைகளை அரசு எடுத்தல் வேண்டும்.

(2) இந்நோக்கத்தை எய்துவதற்காக அரசானது, ஏனைய நாடுகளின் ஒத்துழைப்புடன், அத்தகைய பிள்ளை, அவரின் பெற்றோரையும் குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்களையும் கண்டுபிடிப்பதற்கு அத்தகைய பிள்ளைக்கு பாதுகாப்பையும் உதவியையும் அளித்து, அத்துடன் அவரது குடும்பம் மீள்சேருவதற்கு அவசியமான தகவலையும் பெற்றுத் தருதல் வேண்டும். பெற்றோர் அல்லது குடும்பத்தின் ஏனைய உறுப்பினர்கள் கண்டெடுக்கப்பட முடியாத சந்தர்ப்பங்களில் இப்பட்டயத்தில் எடுத்துக் கூறப்பட்டவாறு, ஏதேனும் காரணத்துக்காக நிரந்தரமாக அல்லது தற்காலிகமாகக் குடும்பச் சூழல் பறிக்கப்பட்ட வேறு ஏதேனும் பிள்ளையைப்போல அதே பாதுகாப்பைப் பெறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உறுப்புரை 24**
**இயலாமையுள்ள பிள்ளைகள்**

(1) அரசு, உடல் ரீதியாக அல்லது உளரீதியாக இயலாமையுள்ள ஒரு பிள்ளை கண்ணியமான பூரண வாழ்க்கை அனுபவிப்பதை உறுதி செய்தல் வேண்டுமென்பதுடன், கௌரவத்தையும் உறுதிசெய்து, தன்னம்பிக்கையை வளர்த்து, அத்தகைய பிள்ளை சமூகத்தில் தீவிரமாக பங்குபற்றுவதை வசதியாக்குதல் வேண்டும்.

(2) அரசு, இயலாமையுள்ள பிள்ளைக்குள்ள விசேட கவனத்தைப் பெறும் உரித்தை அங்கீகரித்து, அத்துடன் அத்தகைய பிள்ளைக்கு உதவியை உறுதி செய்து ஊக்குவித்தலும் வேண்டும்.

(3) அரசு, இயலாமையுள்ள பிள்ளை கல்வி, பயிற்சி, சுகாதாரப் பராமரிப்புச் சேவைகள், புனர்வாழ்வுச் சேவைகள் அணுகுவதற்குப், மற்றும் பிள்ளையின் கலாச்சார ஆண்மீக விருத்தி உள்ளிட்ட இயலக்கூடியளவில் பூரணமாக சமூக ஒருங்கிணைப்பு, மற்றும் தனிப்பட்ட முன்னேற்றம் ஆகியவற்றை பிள்ளை எய்துவதற்கு இடைநேர்வான விதத்தில் வேலை வாய்ப்புப் பெறுவதற்கான பொழுதுபோக்குச் சந்தர்ப்பங்களை உறுதி செய்தல் வேண்டுமென்பதுடன், பெற்றோரதும் பாதுகாவலர்களதும் நிதி நிலையைக் கவனத்திற்கொண்டு இயலாமையுள்ள பிள்ளைக்கு உதவியளித்தலும் வேண்டும்.

(4) அரசு, புனர்வாழ்வு, கல்வி, வாழ்க்கைத் தொழில் சேவைகள் தொடர்பான தகவலைப் பரப்புதல் உட்பட்ட சுகாதாரத் தடுப்புக் கவனம், மருத்துவ, மனோதத்துவ, மற்றும் இயலாமையுள்ள பிள்ளைகளின் அர்த்தபூர்வமான சிகிச்சை போன்ற துறைகளில் ஈடுபட்டுள்ள ஆட்களின் தகமைகளையும், அறிவுத் திறனையும் அபிவிருத்தி செய்யவும், அத்துடன் அரசை இயலச் செய்யும் நோக்குடன் அவ்விடயங்களில் தங்களது அனுபவங்களை விரிவாக்கும் நோக்குடனும் ஏனைய நாடுகளின் உதவியுடன் தோதான தகவலைப் பரிமாறுதலை முன்னேற்றுதல் வேண்டும்.

**உறுப்புரை 25**
**சுகாதாரமும், சுகாதாரச் சேவைகளும்**

(1) எட்டக்கூடிய ஆகக்கூடிய சுகாதாரத் தரத்தையும் மற்றும் நோய்க்குச் சிகிச்சை பெறுவதற்கான ஏனைய வசதிகளையும் அனுபவிப்பதற்கான பிள்ளைன் உரிமையை அங்கீகரித்து, அத்துடன் அத்தகைய சுகாதாரக் கவனச் சேவைகளை அணுகுவதற்கான எந்த பிள்ளையினதும் உரிமையையும் பறிக்கப்படாததை உறுதிசெய்தலும் வேண்டும்.

(2) அரசு, இவ்வுரிமையைச் செயற்படுத்துவதை ஊக்குவித்தலும், குறிப்பாகப் பின்வருவனற்றைச் செய்வதற்கு தோதான வழிவகைகளை எடுத்தலும் வேண்டும்:-

(அ) குழந்தைகளதும், பிள்ளைகளதும் இறப்பு வீதத்தை குறைத்தல்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) ஆரம்பச் சுகாதார கவனிப்புக்களை விருத்தி செய்வதை அடிப்படையாகக்கொண்டு, எல்லாப் பிள்ளைகளுக்கும் அவசியமான மருத்துவ உதவியையும், சுகாதாரக் கவனத்தையும் ஏற்பாடு செய்வதை உறுதிசெய்தல்;

(இ) சூழல் மாசுபடுதலின் அபாயத்தையும், அபாயக்கரத்தன்மையையும் கருத்திற்கொண்டு, சுலபமாகப் பெறப்படக்கூடிய ஏற்புடைத்தான தொழினுட்பம் மூலமும், போதியளவு சத்துள்ள உணவையும், சுத்தமான குடிநீரையும் ஏற்பாடு செய்வதன் மூலமும் போஷாக்கின்மையையும்; நோயையும் எதிர்த்தல்;

(ஈ) பிள்ளை பேறின் முன்னாக, தாய்மாருக்கு தோதான சுகாதாரக் கவனிப்பை உறுதி செய்தல்;

(உ) சமூகத்தின் எல்லா வகுப்பினரும், குறிப்பாக, பெற்றோரும் பிள்ளைகளும் பிள்ளையின் சுகாதாரத்திலும், போஷாக்குத் தன்மையிலும், அத்துடன் தாய்ப்பாலூட்டல், சுத்தமான, சூழல் துப்பரவு மற்றும் விபத்துக்களைத் தடுத்தல் ஆகியவற்றின் அனுகூலங்களிலும் அடிப்படை அறிவைப் பெற்றிருப்பதை உறுதி செய்தல்;

(ஊ) சுகாதாரத் தடுப்புக் கவனச்சேவைகளை அபிவிருத்திசெய்தல், மற்றும் பெற்றோருக்கும், குடும்பத் திட்டக்கல்வி மற்றும் சேவைகளுக்கான வழிகாட்டிகளையும் ஏற்பாடு செய்தல்.

(3) பிள்ளையின் பாதுகாப்பின் அல்லது அவரது உடல், உள சிகிச்சையின் நோக்கத்துக்காக ஏதேனும் நிறுவகம் ஒன்றில் வைக்கப்பட்டுள்ள ஒரு பிள்ளையின் கவனமெடுக்கப்பட வேண்டியதான, பாதுகாக்கப்பட வேண்டியான உரிமையை அங்கீகரித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பிள்ளைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏனைய எல்லா வாழ்வசதிகளையும் காலத்துக்குக்காலம் மீளாய்வு செய்தலும் வேண்டும்;

(4) அரசு, இவ்வுறுப்புரையில் அங்கீகரிக்கப்பட்ட உரிமை முழுமையாக அனுபவிக்கப்படுவதை படிப்படியாக எய்தும் நோக்குடன் சருவதேச ஒத்துழைப்பை முன்னெடுத்துச் சென்று ஊக்குவித்தல் வேண்டும்.

**உறுப்புரை 26**
**சமூகப் பாதுகாப்பு வழிவகைகள்**

அரசானது, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்பு வழிவகைகளின் நலனுக்கு, ஒவ்வொரு பிள்ளைக்குமுள்ள உரிமையை அங்கீகரித்தல் வேண்டுமென்பதுடன் இவ்வுரிமை முழுமையாக அனுபவிக்கப்படுதலை உறுதிசெய்தலும் வேண்டும்.

**உறுப்புரை 27**
**வாழ்க்கைத் தரம்**

(1) அரசானது, பிள்ளையின் உடல், உள, ஆன்மீக, ஒழுக்க மற்றும் சமூக விருத்திக்குப் போதியதான தரப்படி வாழ்வதற்கு ஒவ்வொரு பிள்ளைக்குமுள்ள உரிமையை அங்கீகரித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) பிள்ளையின் பெற்றோர் அல்லது பாதுகாவலர், தங்களது தகுதிகளுக்கும், நிதிவசதிகளுக்குமேற்ப, பிள்ளையின் முன்னேற்றத்துக்கு அவசியமான வாழ் நிலைமைகளை உத்தரவாதமளித்தல் அவர்களது முக்கிய பொறுப்பாகவுள்ளது.

(3) அரசானது, அரச கொள்கையின் வழிகாட்டிக் கோட்பாடுகளுக்கிணங்க, இவ்வுரிமையைப் பெற்றோரும் பாதுகாவலரும் செயற்படுத்துவதற்கு உதவியளிப்பதான தோதான வழிவகைகளை எடுத்தல் வேண்டுமென்பதுடன், அவசியமேற்படும்போது, பொருளளவில் உதவியை வழங்கி, அத்துடன், குறிப்பாக, போஷாக்கு, உடை, வீடமைப்பு போன்றவை தொடர்பில் ஆதரவையும் அளித்தலும் வேண்டும்.

(4) அரசானது, நாட்டினுள் அல்லது நாட்டுக்கு வெளியே வசிக்கும் பெற்றோரிடமிருந்து பிள்ளைக்கு, தாபரிப்பை அறவிடுதலை உத்தரவாதமளித்தலுக்கான தோதான எல்லா வழிவகைகளையும் எடுத்தல் வேண்டும். இந்நோக்கத்தை எய்துவதற்காக, அரசானது, சருவதேச உடன்படிக்கைகளை அனுகுதலை அல்லது அத்தகைய உடன்படிக்கைகளைப் பூர்த்தியாக்குதலையும், தோதான ஏனைய ஒழுங்குகளைச் செய்தலையும் முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும்.

**உறுப்புரை 28**
**கல்வி**

(1) எழுத்தறிவின்மையை முற்றாக ஒழிக்கும் நோக்குடனும், மற்றும் கல்வியை உலகளாவிய விதமாகவும், சமமாகவும் அணுகுவதற்கு எல்லா ஆட்களுக்குமுள்ள உரிமையை உறுதி செய்யும் நோக்குடனும், அரசானது ஆறு வயது பதினாறு வயதுவரை பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்வியைப் புகட்டுதல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் குறிக்கோள்களை எய்தும் நோக்குடன், அரசானது பின்வருவனவற்றை செய்வதற்கு ஒவ்வொரு முயற்சியையும் எடுத்தல் வேண்டும்:-

(அ) இலவச ஆரம்பக் கல்விக்கு ஏற்பாடு செய்த, இந்நன்மையை ஒவ்வொரு பிள்ளையும் பெறுவதனை உறுதி செய்தல்;

(ஆ) பொதுவான வாழ்க்கைத் தொழில் கல்வியூட்டப்பட்ட, வேறுபட்ட விதங்களிலான இரண்டாந்தர கல்வியின் அபிவிருத்தியை ஊக்குவித்து, அத்துடன், அதை ஒவ்வொரு பிள்ளையும் பெறக்கூடிய வாய்ப்பளித்தலும் வேண்டும். மேலும், இலவசக் கல்வியை அறிமுகஞ்செய்தல் மற்றும் தேவையேற்படும்போது நிதியுதவியளித்தல் போன்ற அத்தகைய தோதான வழிவகைகளை எடுத்தலும் வேண்டும்;

(இ) உயர்கல்விக்கு ஏற்பாடு செய்து, தகைமையின் அடிப்படையில் எல்லோரும் அதைப் பெற வழிசெய்தல்;

(ஈ) கல்வி மற்றும் வாழ்க்கைத்தொழில் தகவலையும் வழிகாட்டலையும் ஏற்பாடு செய்து, ஒவ்வொரு பிள்ளைக்கும் அதனைக் கிடைக்கக் கூடியதாகச் செய்தலும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) பள்ளிக்கூடங்களில் கிரமமான வருகைகளையும் ஊக்குவித்து, வெளியேறும் விதத்தைத் தடுப்பதனையும் ஊக்குவிப்பதற்கான தோதான வழிவகைகளையும் எடுத்தல்.

(3) பிள்ளையின் மனித கௌரவத்தை மதிக்கும் விதத்திலும் மற்றும் இப்பட்டயத்துடன் ஒத்தான விதத்திலும் சமூகத்தின் நலன்களுக்காக பாடசாலைகளில் கடும் ஒழுங்கு நடவடிக்கைகளை நிருவகிப்பதை உறுதிப்படுத்துவதற்குத் தோதான எல்லா வழிவகைகளையும் அரசு எடுத்தல் வேண்டும். குறிப்பாக -

(அ) ஆசிரியர்கள், பிள்ளைகளுக்கு மத, சலக, கலாச்சார விடயங்களில் தகுந்த வழிகாட்டல்களை ஏற்பாடு செய்வதை உறுதிசெய்தல் வேண்டும்;

(ஆ) பிள்ளைகள், மற்றைய ஒவ்வொருவரதும் உணர்வுகளையும், கருத்துக்களையும் மதிக்கும் அமைதியான ஒரு சூழ்நிலையில் வளருவதை உறுதிசெய்தல்;

(இ) மதம் வாழ்க்கைப் பாதையென்பதை தலையாய முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதை ஒவ்வொரு ஆசிரியரதும் கடப்பாட்டாக்குதல்.

(4) அரசானது, கல்வி தொடர்பான விடயங்களில், குறிப்பாக நாடு முழுவதிலும் அறியாமையையும் எழுத்தறிவின்மையையும் நீக்குவதற்கு உதவியளிக்கும் நோக்குடன் சருவதேச ஒத்துழைப்பை மேம்படுத்தி ஊக்குவித்தலும், விஞ்ஞான, தொழினுட்ப அறிவு, மற்றும் நவீன கற்பித்தல் முறைகளை பெற இயலச் செய்தலும்.

**உறுப்புரை 29**

**கல்வியின் குறிக்கோள்**

(1) பிள்ளை தொடர்பில் அரசினால் ஏற்பாடு செய்யப்பட்ட கல்வி பின்வருவனவற்றை நெறிப்படுத்துவனவாக அமைதல் வேண்டும் -

(அ) பிள்ளையின் தனித்தன்மை, திறமைகள், மற்றும் உள, உடல் தகவுடைமைகளை அவரது முழுமையான வளவாய்ப்புக்களை அபிவிருத்தி செய்தல்;

(ஆ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தில் போற்றிப்பாதுகாக்கப்பட்டுள்ள கோட்பாடுகளையும் மற்றும் மனித உரிமைகளையும் அடிப்படைச் சுதந்திரங்களையும் மதித்தனை அபிவிருத்தி செய்தல்;

(இ) அவரது பெற்றோரை, மதிப்பதையும், அவரது சொந்தக் கலாச்சார தனித்துவத்தையும், மொழியையும், பண்புப் பெறுமதிகளையும், நாட்டின் தேசிய பெறுமதிகளையும் மற்றும் அவரது நாகரிகத்திலிருந்து வேறுபட்ட நாகரிகத்தையும் அபிவிருத்தி செய்தல்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) ஒரு சுதந்திர சமூகத்தில், புரிந்துணர்வு, சமாதானம், சகிப்புத்தன்மை, இருபாலாருக்குமிடையே சமத்துவம், அத்துடன் இன, தேசிய மற்றும் மதக் குழுக்களைச் சேர்ந்த எல்லா ஆட்களிடையேயும் பல்வேறுபட்ட பிறப்பிடங்களைக் கொண்டவர்களிடையேயும் நட்பையும் கொண்டு பொறுப்பு வாய்ந்த வாழ்க்கைக்கு பிள்ளையைத் தயாரித்தல்;

(உ) இயற்கைச் சூழலை மதித்தலை அபிவிருத்தி செய்தல்.

(2) இவ்வுறுப்புரையினதும், 28ஆம் உறுப்புரையினதும் ஏற்பாடுகள் தனிப் பட்டோருக்கும் குழுக்களுக்கு கல்வி நிறுவனங்களைத் தாபிப்பதற்கும் நெறிப்படுத்துவதற்குமுள்ள சுதந்திரத்துடன் தலையீடு செய்வதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது. ஆயினும் அவை (1) ஆம் பந்தியில் எடுத்துக் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளைக் கடைபிடிப்பதற்கும், அத்துடன், அத்தகைய நிறுவனங்களால் வழங்கப்படும் கல்வி, அரசினால் கொடுக்கப்படும் அத்தகைய ஆகக்குறைந்த தராதரங்களுடன் ஒத்ததாயிருத்தல் வேண்டும் என்னும் தேவைப்பாடுகளுக்கும் அமைந்தனவாதல் வேண்டும்.

## உறுப்புரை 30
## சிறுபான்மைத் தொகுதிகளைச் சேர்ந்த பிள்ளைகள்

சிறுபான்மைத் தொகுதியைச் சேர்ந்த அல்லது சுதேசிய தொகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளைக்கு, தனது சொந்தக் கலாச்சாரத்தை அனுபவிப்பதற்கான, அவரது சொந்த மதத்தைத் தழுவி, அதைப் பின்பற்றுவதற்கான அல்லது அவரது தொகுதியைச் சேர்ந்த ஏனைய உறுப்பினர்களுடன் சேர்ந்து அவரது சொந்த மொழியைப் பாவிப்பதற்கான உரிமை மறுக்கப்படுதலாகாது.

## உறுப்புரை 31
## ஓய்வு, பொழுதுபோக்கு மற்றும் கலாச்சார செயற்பாடுகள்

அரசு–

(அ) பிள்ளையின் வயதுக்கேற்ப தோதான பொழுதுபோக்குச் செயற்பாடுகளிலும், விளையாட்டுகளிலும் ஈடுபடுவதற்கு ஓய்வு நேரங்களை உடையவராயிருப்பதற்கும், அத்துடன் கலாச்சார வாழ்க்கையிலும், கலைகளிலும் தாராளமாகப் பங்குபற்றுவதற்குமான பிள்ளையின் உரிமையை அங்கீகரித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) கலாச்சார மற்றும் கலை வாழ்க்கையில் பங்குபற்றுவதற்கான பிள்ளையின் உரிமையை மதித்து, மேம்படுத்தல் வேண்டுமென்பதுடன், கலாச்சார, கலை பொழுதுபோக்குக்காகவும் ஓய்வு நேரச் செயற்பாடுகளுக்காகவும் தோதான சமமான வாய்ப்புக்களை ஏற்பாடு செய்தலும் வேண்டும்.

## உறுப்புரை 32
## பிள்ளையைக்கொண்டு உழைப்பதிலிருந்து பாதுகாப்பு

(1) அரசு, பொருளாதாரச் சுரண்டலிலிருந்தும், பிள்ளையின் கல்விக்கு அபாயம் விளைக்கக் கூடிய அல்லது அதனுடன் தலையீடு செய்யக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதேனும் வேலையைப் புரிவதிலிருந்தும் பிள்ளையைப் பாதுகாத்தல் வேண்டுமென்பதுடன், பிள்ளையின் சுகாதாரத்துக்கு அல்லது உடல், உள, ஆன்மீக, ஒழுக்க அல்லது சமூக முன்னேற்றத்துக்குக் கேடு விளைக்கக்கூடிய ஏதேனும் செயலிலிருந்து பிள்ளையைப் பாதுகாத்தலும் வேண்டும்;

(2) அரசு, இவ்வுறுப்புரையின் செயற்பாட்டை உறுதிப்படுத்துவதற்கான தோதான சட்டவாக்க, நிருவாக, சமூக மற்றும் கல்விசார் வழிவகைகளை எடுத்தல் வேண்டும்; அத்துடன் குறிப்பாகப் பின்வருவனவற்றை ஏற்பாடு செய்தல் வேண்டும்

(அ) ஊழியத்தின் வேறுபட்ட வகுதிகள் தொடர்பில் ஊழியத்துக்கான ஆகக்குறைந்த ஒருசீரான வயது;

(ஆ) ஊழியத்தின் நிபந்தனைகளும் அத்துடன் வேலை செய்யும் நேரங்களும்;

(இ) இவ்வுறுப்புரையின் பயனுறு வலுவாக்கலுக்காக தண்டங்களும், வேறு தண்டங்களும்.

**உறுப்புரை 33**

**போதைவஸ்துப் பிரேயாகத்திலிருந்தும், கடத்தலிலிருந்தும் பாதுகாப்பு**

அரசானது,

(அ) போதைவஸ்துப் பொருட்களதும், மனநிலையைப் பாதிக்கும் பதார்த்தங்களதும் பாவிப்பிலிருந்து பிள்ளைகளைப் பாதுகாப்பதற்கும் ;

(ஆ) அத்தகைய பதார்த்தங்களைச் சட்டவிரோதமாக உற்பத்தி செய்வதற்கும், கடத்துவதற்கும் பிள்ளைகளைப் பாவிப்பதிலிருந்தும் தடுப்பதற்கும்;

(இ) மது, புகையிலை மற்றும் புகையிலை உற்பத்திப்பொருட்களிலிருந்து பிள்ளைகளை அப்புறப்படுத்துவதற்கும் சட்டவாக்க, நிருவாக, சமூக மற்றும் கல்விசார் வழிவகைகள் உட்பட்ட எல்லா தோதான வழிவகைகளையும் எடுத்தல் வேண்டும்.

**உறுப்புரை 34**

**பாலியல் தவறான நடத்தைக்குப் பயப்படுத்தப்படுவதிலிருந்தும் பாதுகாப்பு**

எல்லா விதமான பாலியல் சுரண்டல்களிலிருந்தும் மற்றும் பாலியல் தவறான நடத்தையிலிருந்தும் பிள்ளையைப் பாதுகாப்பதற்கான வழிவகைகளை எடுத்தல் வேண்டும். அத்துடன் குறிப்பாக ஒரு பிள்ளை –

(அ) ஏதேனும் சட்டமுரணான பாலியல் நடவடிக்கையின் தூண்டுதலை அல்லது வலுக்கட்டாயப்படுத்தலை;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஆ) விபச்சாரத்தில் அல்லது வேறு ஏதேனும் சட்டமுரணான பாலியற் பழக்கங்களில் பிள்ளையைத் தகாதவழியில் பயன்படுத்தலை;

(இ) ஆபாசமான நடத்தையிலும், பொருட்களிலும் பிள்ளைகளைத் தகாதவழியில் பயன்படுத்தலை, தடுத்தல் வேண்டும்.

**உறுப்புரை 35**
**விற்பனையிலிருந்தும், ஆட்கலவரவிலிருந்துமான பாதுகாப்பு**

ஏதேனும் நோக்கத்துக்காக அல்லது ஏதேனும் விதத்தில் பிள்ளைகளை விற்பனை செய்வதனை அல்லது ஆட்கவருதனைத் தடுப்பதற்கான தோதான எல்லா தேசிய, இருபக்க, பல்பக்க வழிவகைகளை அரசு எடுத்தல் வேண்டும்.

**உறுப்புரை 36**
**சித்திரவதையிலிருந்தும், மற்றும் சுதந்திரம் பறிக்கப்படுவதிலிருந்துமான பாதுகாப்பு**

(அ) பிள்ளை, சித்திரவதைக்கு அல்லது வேறு கொடுரத்துக்கு மனிதாபிமான மற்றத்தன்மைக்கு அல்லது தரக்குறைவுக்கு உட்படுதலாகாது, அத்தகைய பிள்ளையினால் புரியப்பட்ட தவறுகளுக்கு தூக்குத் தண்டனை அல்லது விடுதலையடைய முடியாத ஆயுட்தண்டனை விதிக்கப்படுதலாகாது;

(ஆ) பிள்ளையின் சுதந்திரம், சட்டமுரணாக அல்லது ஏதேச்சதிகாரமாகப் பறிக்கப்படுதலாகாது, சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடபடிமுறைக் கிணங்கலன்றி பிள்ளை கைது செய்யப்படுதல் அல்லது தடுத்து வகைக் கப்படுதலாகாது;

(இ) சுதந்திரம் பறிக்கப்பட்ட ஒரு பிள்ளை –

(i) மனிதாபிமானத்துடன், நடத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் மனித சுய கௌரவத்துடன் மதிக்கப்படுதல் வேண்டும். சுதந்திரம் பறிக்கப்பட்ட ஒவ்வொரு பிள்ளையும், அங்ஙனஞ் செய்யாதிருந்தல் பிள்ளையின் மிகச்சிறந்த அக்கறை கருதியதாயிருத்தாலேயன்றி, வயதுவந்தவர்களிட மிருந்து பிரிக்கப்படுதல் வேண்டும். அத்துடன் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் தவிர, பிள்ளை கடிதத் தொடர்புகள் மூலமும், சென்றுபார்த்தல்கள் மூலமும் தனது குடும்பத்துடன் தொடர்புகளை வைத்திருப்பதற்கான உரித்துடையவராதல் வேண்டும்;

(ii) சட்ட அணுகுதலுக்கும் மற்றும் ஏனைய தோதான உதவிகளுக்கும் அத்துடன் சட்ட நீதிமன்றம் ஒன்றில் அவரது சுதந்திரம் பறிக்கப்பட்டதற்கான சட்டத்தன்மையை ஆட்சேபிப்பதற்கானதும் மற்றும் அத்தகைய ஏதேனும் வழக்கில் துரித முடிவைப் பெற்றுக் கொள்வதற்கானதுமான உரித்தை உடையவராதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உறுப்புரை 37
## ஆயுதப் போராட்டங்களிலிருந்தான பாதுகாப்பு,

அரசானது,

(அ) யுத்தங்களில் நேரடியாக பிள்ளை பங்குபற்றாது என்பதை உறுதிப்படுத்துவதற்கான இயலக்கூடிய எல்லா வழிவகைகளையும் எடுத்தல் வேண்டும்;

(ஆ) பிள்ளை ஆயுதப்படைகளில் ஆட்சேர்க்கப்படுவதை தடைசெய்தல் வேண்டும்;

(இ) ஆயுதப்போராட்டங்களினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்வதற்கான இயலக்கூடிய எல்லா வழிவகைகளையும் எடுத்தல் வேண்டும்.

### உறுப்புரை 38
## புனர்வாழ்வுப் பராமரிப்பு

ஏதேனும் விதமான கவனமெடுக்காமை, சுரண்டல், தகாதநடத்தை, சித்திரவதை அல்லது வேறு ஏதேனும் விதமான கொடூரம், மனிதாபிமானமற்றத்தன்மை அல்லது தரக்குறைவான தண்டனை அல்லது ஆயுதப் போராட்டம் ஆகியவற்றுக்கு இலக்கான ஒரு பிள்ளையின் உடல்மற்றும் மனோத்தத்துவரீதியாகக் குணமடைவதையும் அத்துடன் வழிவகைகளையும் எடுத்தல் அரசின் கடப்பாடாதல் வேண்டும். அத்தகைய குணமடைதலும் மீள் கொணர்தலும், பிள்ளையின் சுகாதாரம், கல்வி வசதிகளை ஏற்பாடு செய்யும் ஒரு சூழலில் இடம்பெறுதல் வேண்டும் என்பதுடன், பிள்ளையின் சுயமதிப்பையும் கௌரவத்தையும் ஆதரித்தலும் வேண்டும்.

### உறுப்புரை 39
## பாலியக் குற்றவாளிகளுக்கான நீதியை நிருவகித்தல்

(1) சட்டத்தை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்படும் அல்லது கொள்ளப்படும் ஒவ்வொரு பிள்ளையும், மனித உரிமைகளை பிள்ளை மதித்தல் பிள்ளையின் வயது மற்றும் பிள்ளையின் மீள்சீர்நிலையை மேம்படுத்தலின் விருப்புத்தன்மை, சமூகத்தில் வசிக்கவேண்டிய ஆக்க பூர்வமான பங்கு ஆகியவற்றை மீள் வலியுறுத்துவதான பிள்ளையின் கௌரவத்தையும் பெறுமதியையும் மேம்படுத்துவதுடன் ஒத்ததான ஒரு முறையில் நடாத்தப்பட வேண்டியதான உரிமையை அங்கீகரித்தல் வேண்டும்.

(2) இலங்கை சனநாயகச் சோசலிசக்குடியரசின் அரசியலமைப்புச் சட்டத்தினால் போற்றிப் பாதுகாக்கப்பட்டவாறு, ஒவ்வொரு ஆளும் குற்றவாளியாக என்பிக்கப்படும்வரை குற்றமற்றவராக ஊகிக்கப்படுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) சட்டத்தை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அல்லது கொள்ளப்படும் ஒவ்வொரு பிள்ளைக்கும் பின்வருவன உத்தரவாதம் செய்யப்படுதல் வேண்டும் –

(அ) அவருக்கெதிரான குற்றச்சாட்டுக்களைத் துரிதமாகவும் நேரடியாகவும் தெரியப்படுத்தலும் (அத்துடன் தோதானவிடத்து அவரது பெற்றோர் மூலமும் பாதுகாவலர் மூலமும்), அவரது எதிர்காப்புக்களைத் தயாரிப்பதிலும், கொடுப்பதிலும் உதவியளித்தல்;

(ஆ) தகுதிவாய்ந்த நீதிமன்றத்தினால் சட்டத்துக்கிணங்க நியாயமான கேட்பில் அவ்விடயம் தீர்மானிக்கப்படுதல்;

(இ) குற்றத்தை ஏற்றுக்கொள்ளலை அல்லது சான்றளிதலைக் கட்டாயப் படுத்தாமை, அவரது சார்பில் பங்களிப்பைப் பெற்று சாட்சிகளை விசாரித்தல்.

(4) அரசானது,

(அ) அவசியமான சட்டவாக்கத்தை மேம்படுத்தல் வேண்டும்;

(ஆ) சட்டத்தை மீறியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றவாளியாகக் காணப்பட்ட பிள்ளைக்கு விசேடமாக ஏற்புடைதான அதிகாரசபைகளையும், நிறுவனங்களையும் தாபித்தல் வேண்டும்.

(5) ஒரு குழந்தை சட்டத்தை மீறக்கூடிய ஆற்றலை பெற்றிருக்க முடியாதற்கான குறைந்த பட்ச வயதை அரசு நிர்ணயம் செய்யும்.

(6) அரசானது, மனித உரிமைகளையும், சட்ட எதிர்காப்புக்களையும் உகந்த கவனத்திலெடுத்து முடிந்தளவு நீதிநடவடிக்கைகளை எடுக்காது அத்தகைய பிள்ளைகளுடன் ஈடுபடுவதற்கான வழிவகைகளை எடுத்தல் வேண்டும்.

(7) அரசு, சட்டத்தை மீறியதாகக் குற்றவாளியாகக் காணப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு பிள்ளையை நிறுவனப்படுத்தலை ஆகக்கூடிய இயலக் கூடியளவுக்குத் தடுப்பதான நெகுழ்ந்தன்மையை அனுமதிப்பதான பல்தரப்பட்ட ஏற்பாடுகளை அதிகார சபைகள் பெறச் செய்தல் வேண்டும்.

(8) சட்டத்தை மீறியதாகக் குற்றவாளியாகக் காணப்பட்ட அல்லது குற்றஞ் சாட்டப்பட்ட ஒரு பிள்ளைக்கு கவனம், வழிகாட்டல், ஆலோசனையளித்தல், கல்வி, மற்றும் வாழ்க்கைத் தொழிற்பயிற்சி ஆகியவை கிடைக்கப் பெறுவதை உறுதிசெய்தல் வேண்டுமென்பதுடன், அத்துடன் அத்தகைய பிள்ளையின் சேமநலத்தைக் கருதும்விதத்தில் அப்பிள்ளை நடத்தப்படுவதை அரசு உறுதிசெய்தலும் வேண்டும்.

## உறுப்புரை 40
## குழுவைத் தாபித்தல்

(1) பட்டயத்தை செயற்படுத்துவதைக் கண்காணிக்கும் நோக்கத்துக்காக பின்வரும் ஆட்களைக் கொண்ட குழுவொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அ) சனாதிபதியால் நியமிக்கப்படும் ஆறு நபர்கள்;

(ஆ) கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அல்லது அவரது பிரதிநிதி;

(இ) நீதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அல்லது அவரது பிரதிநிதி;

(ஈ) பாதுகாப்பு என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அல்லது அவரது பிரதிநிதி;

(உ) சுகாதாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அல்லது அவரது பிரதிநிதி;

(ஊ) மகளிர் அலுவல்கள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அல்லது அவரது பிரதிநிதி;

(எ) சமூகநலன் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அல்லது அவரது பிரதிநிதி;

(ஏ) கொள்கைத்திட்டமிடல் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அல்லது அவரது பிரதிநிதி;

(ஐ) தொழில் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அல்லது அவரது பிரதிநிதி;

(ஒ) மாகாண சபைகள் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அல்லது அவரது பிரதிநிதி;

(ஓ) நன்னடத்தை, பிள்ளை பராமரிப்புச் சேவைகள் ஆணையாளர்.

(2) குழுவின் தவிசாளர் சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் –

(அ) அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழங்கல்;

(ஆ) இப்பட்டயத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் விழிப்புணர்ச்சியை உருவாக்கல்;

(இ) சட்டவாக்கச் சீர்திருத்தங்கள் மேம்படுத்தி, பட்டயத்தில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் விதிப்புரைகளை வழங்கல்;

(ஈ) பட்டயத்தில் ஏற்பாடுகளைச் செயற்படுத்துவதின் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed by Samayawardhana - Colombo 10.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org